### தமிழ்த்தேசிய விடுதலைப்போராட்டம் எதைநோக்கி?

# தனித் தமிழீழக் கோரிக்கை...? பேச்சுவார்த்தைகள்...? கால் நூற்றாண்டுகால விடுதலைப்போராட்டம்...?

**வி.சிவலிங்கம்**

இலங்கையில் இடம்பெற்று வரும் தேசிய நெருக்கடிகள் ஓர் நிர்ணயமான கட்டத்தை எட்டியுள்ளன. இனப்பிரச்சினையை ஆயுத வன்முறையால் தீர்க்கலாம் என்ற வழிமுறையும் இனப் பிரச்சினையின் அரசியல் அம்சத்தைப் புறக்கணித்து அதனோடிணைந்து செல்லும் ஆயுத வன்முறையைத் தனிமைப்படுத்தி அதனைப் பயங்கரவாதம் என வர்ணித்து அதனை ஒடுக்க எடுக்கப்பட்ட முயற்சிகளும் பெரும் மனித அவலங்களைத் தோற்றுவித்துள்ள நிலையில், நாடு வரலாறு காணாத பிரச்சினைக்குள் சிக்கித் தவிக்கிறது. இலங்கையின் அரச கட்டுமானம் என்பது தோல்வியடைந்த ஒன்றாகக் கருதும் அளவுக்கு நிலைமைகள் மாற்றமடைந்துள்ளன.



இந்நிலையில் நாட்டின் தேசிய நலன் கருதிச் சில பிரச்சினைகளைப் பகிரங்கமாகப் பேசவேண்டிய காலகட்டம் இதுவாகும். சிங்கள மக்கள் மத்தியிலே தற்போதைய நிலவரங்கள் அதனால் ஏற்படக்கூடிய ஆபத்துகள் மாற்று வழிமுறைகள் என்பவைபற்றி விவாதங்கள் இடம்பெற்றுவருகின்றபோதிலும் சிறுபான்மை இனங்கள் மத்தியிலே, குறிப்பாகத் தமிழ் மக்கள் மத்தியிலே, இவை பேசப்படவில்லையென்பது கவனத்திற்குரியது. தமிழ் மக்கள் மத்தியிலே கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக இனப்பிரச்சினையை மையப்படுத்திச் செயற்பட்டு வரும் விடுதலைப் புலிகளின் அணுகுமுறைகளின் பெறுபேறுகள் குறித்து பேசப்பட வேண்டிய காலகட்டம் இதுவாகும். அரசியல் பிரச்சினை குறித்து தம்முடன் மட்டுமே பேசப்படவேண்டும் எனவும் தாமே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் எனவும் உரிமை கோரி, அதனடிப்படையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டனர். இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அணுகுமுறையாக ஆயுத வன்முறையும் போர் நிறுத்தத்துடன் கூடிய பேச்சுவார்த்தைகளுக்கும் மக்கள் வாய்ப்பளித்தனர். ஆயுத வன்முறையோ பேச்சுவார்த்தைகளோ நிலைமைகளை மாற்ற உதவவில்லை.

இந்த இரண்டு வழிமுறைகளும் தோல்வியடைந்துள்ளமை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இத்தோல்விக்குக் காரணம் என்ன?

ஆயுத வன்முறை என்ற உத்தி தோல்வியைத்

தந்ததா அல்லது பேச்சுவார்த்தை தோல்வியை ஏற்படுத்தியதா?

இந்த இரண்டு உபாயங்களும் தோல்வியடைந்தமைக்குக் காரணம் தெளிவான அரசியல் இலக்கு இல்லாமையே ஆகும். இனப்பிரச்சினைக்கான தீர்வாக 'தனித் தமிழீழம்' என்ற இலக்கு முன்வைக்கப்பட்டது. இந்த இலக்கை நோக்கி கடந்த 25 வருடங்களுக்கும் மேலாகப் பயணித்தவர்கள் இலக்கிற்கும் தமது பயணத் துாரத்திற்கும் இடையேயான இடைவெளியை மதிப்பீடு செய்யத் தவறியுள்ளனர். இந்தக் கால் நூற்றாண்டு காலத்தில் அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்களை அவதானிக்கத் தவறியுள்ளனர். நாட்டில் மாற்றமடைந்து சென்ற பொருளாதார - சமூகக்கட்டுமான மாற்றங்கள், சர்வதேச அளவிலான பாரிய மாற்றங்கள் என்பன 'தமிழீழக் கோரிக்கை' என்பது காலத்திற்கொவ்வாத ஒன்றாக மாறியுள்ளதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை.

தமிழீழக் கோரிக்கையானது வெற்றுக் கனவாக மாற்றமடைந்துள்ள நிலைமையை இப் போர்ச்சூழலுக்குள் வாழ்ந்து வரும் மக்கள் யதார்த்தபூர்வமாக உணர்ந்துள்ளனர். 25 வருடகால வன்முறையும் இக் காலப் பகுதிக்குள் காணப்பட்ட உள் முரண்பாடுகளும் மக்களுக்கும் கோரிக்கைகளுக்கும் இடையே நீண்டு செல்லும் இடைவெளிகளும் அதன் யதார்த்தத்தை உணர்த்தின. இந்த நீண்ட இடைவெளிக்குள் நாட்டை விட்டு வெளியேறி மேற்குலக நாடுகளில் வாழ்க்கையை ஆரம்பித்துள்ள மத்தியதர வர்க்கம் போரின் கொடுமைகளை அனுபவிக்கவோ அல்லது அகதிகளாக முகாம்களிலே பல வருடங்களாக அரச கொடுப்பனவுகளில் தங்கி வாழும் அவலங்களை உணரவோ வாய்ப்பிருக்கவில்லை. தமக்குக் கிடைத்த வசதியான வாழ்வு நிலைமைகளைப் பயன்படுத்தி ஒரு சமூக அந்தஸ்துடன் வாழ்வதற்கான ஓர் கற்பனை ராஜ்யத்தை, அதாவது தமிழ்ஈழத்தை, காண விரும்புகிறார்கள்.

பொருளாதார வாழ்வில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் முரண்பட்ட அரசியல் பார்வையை ஏற்படுத்தியுள்ளன. இலங்கைக்குள்ளே வாழும் தமிழ் மக்கள் தமிழீழத்தின் வெற்றுத்தன்மையை யதார்த்தபூர்வமாகக் காணும் போது, நாட்டுக்கு வெளியில் அமைதியான - மகிழ்ச்சியான வாழ்வை அனுபவிப்பவர்கள் கற்பனையில் சஞ்சரிப்பதையும் நாம் காணலாம்.

இவ்வாறான போக்கு இந்தியாவின் பஞ்சாப் - சீக்கிய மக்களிடையேயும் காணப்பட்டது. மிகவும் பொருளாதார வளம் மிகுந்த பகுதி என்பதால் இந்தியாவில் இருந்து பிரிந்து காலிஸ்தான் என்ற தனிநாட்டை உருவாக்க சீக்கியர்களில் ஒரு சாரார் விரும்பினார்கள். வன்முறையைக் கையாண்டார்கள். சர்வதேச ஆதரவைப் பெற்றார்கள். வெளிநாடுகளில் வாழ்ந்த சீக்கியர்கள் புனித காலிஸ்தான் கோரி மாபெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள். உள்நாட்டில் பெரும் போராட்டங்கள் இடம்பெற்றபோது ஆர்ப்பரித்தார்கள். இன்று காலிஸ்தான் போராட்டம் எங்கே? ஏன் தோல்வி அடைந்தது? இத்தோல்விக்கு யார் காரணம்?

இலக்கை நோக்கிய பயணங்கள் சரியாக மதிப்பீடு செய்யப்படாததன் விளைவே என்பதை இவ்வனுபவங்கள் உணர்த்தி நிற்கின்றன.



## இலங்கை அரசியல்

தனித் தமிழீழக் கோரிக்கையும் அதனை அடைய எடுத்த முயற்சிகளும் தோல்வியை அடைந்துள்ளன என்ற முடிவுக்கு நாம் வருவோமாயின் மாற்று அணுகு முறை பற்றி விவரிப்பதன் அவசியத்தைப் புரிந்து கொள்ள முடியும். எனவே இனப்பிரச்சினைக்கான புதிய அணுகுமுறைகள் குறித்துப் பேசப்படவேண்டும். இவை நாட்டை எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளையும் உள்ளடக்கியதாக அமையவேண்டும். இந்த அடிப்படை யிலேயே பிரச்சினைகளை நோக்கிய பார்வையை இக் கட்டுரை வழங்க முனைகிறது.

இனப்பிரச்சினைக்கான தீர்வுகளை சிங்களப் பேரினவாதக் கோட்பாடுகளின் பெறுபேறுகளில் இருந்து மட்டும் பார்க்க முடியாது. நிரந்தரத் தீர்வுகள் என்பது பேச்சுவார்த்தைகளின் முடிவுகளில் மட்டும் தங்கி இருப்பதில்லை. அதனை நிறைவேற்றும் வகை யில் செயற்படும் அரசகட்டுமானங்களிலேயே பெரிதும் தங்கியுள்ளது. இலங்கையின் அரச கட்டு மானங்களில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதனை வரலாற்று ரீதியாக ஏற்பட்டுள்ள மாற்றங்களினூடாகவே அவதா னிக்க முடியும்.

அரச கட்டுமானங்களில் ஏற்பட்டு வரும் மாற்றங் களில் கவனம் செலுத்தாது தீர்வுகளில் மட்டும் ஆர்வம் காட்டும் போக்குத் தற்போது அதிகம் காணப்படுகிறது. குறிப்பாகத் தமிழர் தரப்பில் இவ்வாறான அணுகு முறையே பெருமளவில் தென்படுகிறது. இதன் காரண மாகவே பேரம்பேசும் அரசியல் அணுகுமுறையில் ஆர்வம் செலுத்தப்படுகிறது. சுதந்திரமடைந்த காலம் முதல் இன்றுவரை நாட்டின் அரச கட்டுமானம் தொடர் பாக எவ்வித கொள்கையும் இல்லாமல் வெறுமனே இனப்பிரச்சினைக்கான தீர்வுகளில் மட்டும் கவனத் தைச் செலுத்தி வந்தமையும் தொடர்ச்சியான தோல்வி களுக்குக் காரணமாக அமைந்தது எனக்கொள்ளலாம்.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து இதுவரை இலங்கையில் மூன்று அரசியல் அமைப்புகள் செயற்பாட்டில் இருந்தன. சோல்பரி அரசியல் அமைப்பு, 1972இல் அறிமுகப்படுத்தப்பட்ட முதலாவது குடியரசு யாப்பு, 1978இல் அறிமுகப்படுத்தப்பட்டு இன்றுவரை செயற்பாட்டில் உள்ள இரண்டாவது குடியரசு யாப்பு என்பனவாகும். இந்த வரலாற்றுக் காலத்தில், குறிப்பாக சோல்பரி அரசியலமைப்பு செயற்பட்ட 24 வருட காலத் திலும், முதலாவது குடியரசு செயற்பாட்டிலிருந்த ஆறு வருடங்களிலும் மொத்தமாக 30 வருடங்கள் இலங்கை அரசியலில் பாராளுமன்றம் முக்கிய ஸ்தானத்தை வகித்து வந்தது. நாட்டை எதிர்நோக்கிய பல்வேறு நெருக்கடிகளை பேசித் தீர்க்கும் தளமாக பாராளு மன்றமே அமைந்திருந்தது. ஆசியாவின் மிக நீண்ட ஜனநாயக அரசியல் வரலாற்றைக் கொண்ட நாடுகளில் இலங்கையும் முக்கிய ஸ்தானத்தைப் பெற்றிருந்தது. 1972ம் ஆண்டு முதலாவது குடியரசு யாப்பு அமுலுக்கு வந்த பின்னர் நாட்டின் ஆட்சிக் கோட் பாட்டில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. காலனித்துவ ஆட்சியினரின் சோல்பரி அரசியலமைப்பு மாற்றப்பட்டு நாடு சுதந்திரக் குடியரசாக முதல்முதலாக மாற்றப்பட்டது. இதன் காரணமாக நாட்டின் பிரதான ஏற்றுமதித் துறைகள்

> **“ வடக்கு கிழக்கில் முன்வைக்கப்பட்ட அரசியல் கோரிக்கைகளும் அவை தொடர்பாக எழுந்த ஆயுதப் போராட்டங்களும் நாட்டுப் பிரிவினை எனவும் பயங்கரவாதமெனவும் அடையாளப் படுத்தப்பட்டன. இதன் காரணமாக நாட்டின் இறைமையையும் பேணப்போவதாகக் கூறி ஆட்சிக் கட்டுமானம் ராணுவம் சார்ந்த செயற்பாட்டுக்குள் எடுத்துச் செல்லப்பட்டது. ”**

தேச உடைமையாக்கப்பட்டு தேசத்தின் பொருளா தாரம் இலங்கை அரசின் முழுக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இதேபோன்று அடிப்படை ஜனநாயக மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு அதிகாரம் மக்களைச் சென்றடையும் விதத்தில் மக்கள் சபைகள் உருவாக்கப்பட்டன. தேசமானது சுதந்திரக் குடியர சாக மாற்றம் பெற்றபோதிலும் தேசிய சிறுபான்மை இனங்களுக்கான போதுமான பாதுகாப்பு ஏற்படுத்தப் படாமையால் தமிழீழப் பிரதேசங்களில் அரசுக்கெ திரான போக்குக் காணப்பட்டது. இருந்த போதிலும் பிரச்சினைகளை விவாதிக்கும் தளமாக பாராளு மன்றமே காணப்பட்டது அல்லது ஜனநாயக விழுமியங் களின் மையத் தளமாக பாராளுமன்றமே அமைந்தது.

1977ம் ஆண்டு இலங்கையின் அரசியல் வரலாற்றின் மிகமுக்கியமான காலகட்டமாக அமைந்தது. நாட்டின் பிரதான அரசியல் கட்சியாகவும் சர்வதேச ஏகாதி பத்திய சக்திகளின் நண்பனாகவும் செயற்பட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் நலன்கள் 70-77 ஆண்டு காலப் பகுதியில் மிகவும் பாதிப்புக்குள்ளாகின. ஏகாதிபத்திய அரசான பிரித்தானிய அரசின் கட்டுப்பாட்டில் தேயிலை, ரப்பர் போன்ற பெருந்தோட்ட நிலங்கள் தேச உடைமை யாக்கப்பட்டதால் இக்கட்சியின் நலன்களும் மிக மோச மாகப் பாதிக்கப்பட்டது. இம்மாற்றங்களை சகித்துக் கொள்ள முடியாத ஏகாபதிபத்திய சார்புக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அப்போது ஆட்சியில் இருந்த ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிரான பிரச்சாரத்தை புதிய வடிவில் முன்னெடுத்தது.

வடக்கு கிழக்கில் காணப்பட்ட பிரிவினைக் கோஷங்கள், அவ்வப்போது காணப்பட்ட ஆயுத வன் முறைகள், ஐக்கிய முன்னணி அரசுக்குள் காணப் பட்ட உள்கட்சி மோதல்கள், கட்சித் தாவல்கள், சர்வ தேச ஏகாதிபத்திய அரசுகளால் செயற்படுத்தப்பட்ட பொரு ளாதாரத் தடைகளால் உள்நாட்டில் ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறை என்பன பாராளுமன்ற ஆட்சியின் தோல் விகளாக முன்வைக்கப்பட்டன. நாட்டின் பாதுகாப் புக்கும் இறைமைக்கும் அச்சுறுத்தலாக வடக்கு கிழக்

கில் காணப்பட்ட ஆயுத வன்முறை விமர்சிக்கப்பட்டு பலமான புதிய ஆட்சிமுறை அவசியம் எனவும் தேர்தலின் முக்கிய கோரிக்கையாக முன்வைக்கப்பட்டது.

இதன் விளைவாக 1977ம் ஆண்டில் மிகப்பெரும் பான்மையோடு தெரிவு செய்யப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி அரசு நாட்டின் அரசுக்கட்டுமானத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. வடக்கு கிழக்கில் முன் வைக்கப்பட்ட அரசியல் கோரிக்கைகளும் அவை தொடர்பாக எழுந்த ஆயுதப் போராட்டங்களும் நாட்டுப் பிரிவினை எனவும் பயங்கரவாதமெனவும் அடையாளப் படுத்தப்பட்டன. இதன் காரணமாக நாட்டின் இறைமையையும் பேணப்போவதாகக் கூறி ஆட்சிக் கட்டுமானம் ராணுவம் சார்ந்த செயற்பாட்டுக்குள் எடுத்துச் செல்லப்பட்டது. 1948 முதல் 1977 வரையான காலப் பகுதியில் காணப்பட்ட ஜனநாயகச் சூழல் படிப்படியாக மாற்றமடையத் தொடங்கியது. 1977ம் ஆண்டு முதல் 1994ம் ஆண்டு வரையான 17 ஆண்டு காலப்பகுதியில் நாட்டின் அரசுக் கட்டுமானத்தின் போக்கு பாதுகாப்பு நோக்கிய மையக் கருத்தை நோக்கி நகர்த்தப்பட்டதன் காரணமாக, ஜனநாயகக் கோட்பாடுகளின் அடிப்படையில் கட்டப்பட்ட பல அரசியல் ஸ்தாபனங்களின் செயற்பாடுகள் பலவீனப்படுத்தப்பட்டன. அரசு என்பது பலமானதாக அமைய வேண்டும் என்ற கருத்துக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு படிப்படியாக இராணுவ அடிப்படையிலான திட்டமிடுதலின் தளமாக மாற்றமடைந்தது. 17 ஆண்டுகள் தொடர்ச்சியாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலம் நிலவியதாலும் அரச இயந்திரம் இராணுவ மயமாக்கப்பட்டதினாலும் அதே நிலைமைகளும் அணுகுமுறைகளும் தொடர்வதை நாம் வரலாற்றின் போக்கில் அவதானிக்கலாம். 1994ம் ஆண்டு பதவிக்கு வந்த சந்திரிக்கா பண்டாரநாயக்கா தலைமையிலான பொதுஜன முன்னணி அரசு இனப் பிரச்சினைக்கான தீர்வை ஏற்படுத்தப் போவதாகக் கூறி மிகப்பெருந்தொகையான ஆதரவோடு பதவிக்கு வந்தது. இலங்கையின் அரசியல் வரலாற்றிலே இனப் பிரச்சினையை நாட்டின் பிரதான பிரச்சினையாக முன்வைத்து நடத்தப்பட்ட பொதுத் தேர்தல் அதுவாகும். தமிழ்பேசும் மக்களின் கணிசமான தொகையினரின் ஆதரவோடு பதவிக்கு வந்த பொதுஜன முன்னணி அரசினால் தேர்தலில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமற் போனது. இதற்குப் பிரதான காரணம் ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட ஆட்சிக் காலத்தில் இராணுவப் பாதையை நோக்கி அரச கட்டுமானங்கள் திசைதிருப்பப்பட்டதால் சமாதான முயற்சிகளை மேற்கொள்வதற்கு மிகப்பெரிய தடைகள் ஏற்பட்டன. இதன் காரணமாக சந்திரிக்கா அரசும் போர்ச்சூழலுக்குள் தள்ளப்பட்டது. மிக அதிகளவிலான இழப்புகள் இரண்டு தரப்பிலும் ஏற்பட்டன.

இன்று இலங்கையில் காணப்படும் அரசியல் போக்கைத் தெளிவாக அடையாளம் காணுவதன் மூலமே இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கான மார்க்கம் பற்றிய பாதையை தேட முடியும். ஐக்கிய தேசியக் கட்சியினால் ஆரம்பிக்கப்பட்ட இராணுவமயமாக்கல் என்ற பயணம் ஜனநாயகக் கட்டுமானங்களைப் பலவீனப்படுத்தி வருவதோடு மட்டுமல்லாமல் அரசியல் நடவடிக்கைகளையும் பின்னோக்கி இழுத்துச் செல்கிறது. 1978ம் ஆண்டு அமுலாக்கப்பட்ட இறுக்கமான அரசியலமைப்பும் அதன் காரணமாக உருவாக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையும் அதிகாரங்களைத் தனிமனிதனின் கையில் குவிப்பதற்கான காரணிகளாக அமைந்தன. இதுவே அரசியல் வன்முறைக்கான தோற்றுவாயாக அமைந்தது. சுதந் திர காலம் முதல் படிப்படியாக உருவாக்கப்பட்ட ஜனநாயக விழுமியங்கள் சிதைக்கப்பட்டன.




பாராளுமன்ற ஜனநாயகத்தின் வேராக அமைந் துள்ள தேர்தல் முறை கேள்விக்குட்படுத்தப்பட்டது. தேர்தல் முறைகேடுகள் முன்னெப்போதையும் விட மோசமாகியது. ஆள்மாறாட்டம் வாக்குப் பெட்டிகள் திருடுதல் வாக்காளர்களைப் பயமுறுத்தல் போன்றன தேர்தலை நிர்ணயித்தன. இதனால் ஜனநாயக அரசியல் என்பது கேள்விக்குட்படுத்தப்பட்டது.

ஆரம்பத்தில் வன்முறைகள் என்பது தேர்தல் கால அரசியல் வன்முறைகளாக இருந்த நிலை படிப்படியாக மாறி இனங்களுக்கிடையேயான வன்முறைகளாக விரிவடைந்தன. அரசுக்கு எதிரான கிளர்ச்சிகளாகவும் உக்கிரமடைந்தன. அரசியல் வன்முறையின் வளர்ச்சியானது அரசியல்

> **“வன்முறையின் ஒட்டுமொத்தமான தாக்கத்தினை அரசியல் அமைப்பில் படிப்படியாக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் அடையாளப்படுத்தின. பயங்கரவாத தடைச்சட்டம் போன்ற பல ஒடுக்குமுறைச் சட்டங்கள் நாட்டின் ஜனநாயகச் செயற்பாடுகளுக்குச் சாவுமணி அடித்தன.”**

எதேச்சாதிகார நிலைமைக்கு இட்டுச் சென்றது. வன்முறையின் ஒட்டுமொத்தமான தாக்கத்தினை அரசியல் அமைப்பில் படிப்படியாக மேற்கொள் ளப்பட்ட திருத்தங்கள் அடையாளப்படுத்தின. பயங்கரவாத தடைச்சட்டம் போன்ற பல ஒடுக்குமுறைச் சட்டங்கள் நாட்டின் ஜனநாயகச் செயற்பாடுகளுக்குச் சாவுமணி அடித்தன.

நாட்டில் நிலையான ஆட்சி ஒன்றை நிறுவவும் பொருளாதாரத் துறையில் துரிதமான வளர்ச்சியை ஏற்படுத்தவும் என உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பு புதிய அரசியல் கலாச்சாரத்தைத் தோற்றுவித்தது. பயங்கரவாத தடைச்சட்டம் என்ற போர்வையில் மக்களின் ஜனநாயக உரிமைப் போராட்டங்கள் நசுக்கப் பட்டன. தொழிற்சங்கங்களின் செயற்பாடுகள் சட்ட விரோதமாக்கப்பட்டன. வேலைநிறுத்தம் மேற்கொண்ட தொழிற்சங்கத் தலைவர்கள் பயமு றுத்தப்பட்டார்கள். படுகொலை செய்யப்பட்டார்கள். மாணவர் உரிமைப் போராட்டங்களை நடத்தியவர்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள். ஜனநாயகத்தின் பிரதான கூறாகச் செயற்படும் பத்திரிகைத்துறை தணிக்கைக் குட்படுத்தப்பட்டது. பத்திரிகை நிறுவனங்கள் மூடப் பட்டன. வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டன. மான நஷ்ட வழக்குகளால் பத்திரிகை நிறுவனங்கள் திவாலாகி இருந்தன.

சமூகத்தில் வளர்ச்சியுற்று வந்த வன்முறையானது அரச வன்முறையையும் தனது மட்டத்திற்கு இழுத்துச் சென்றது. இதனால் பயங்கரவாதம் மேலும் விஸ்த ரித்துச் சென்றது. அரச நிர்வாகமானது அவசரகால விதிகளின்கீழ் தனது நிர்வாகத்தைத் தொடர்ச்சியாக நடத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டது. சமூக நிலைமை களைக் கட்டுப்படுத்த சாதாரண சிவில் அதிகாரங் களைப் பயன்படுத்த முடியாமையினால் அவசர காலச் சட்டங்களே சமூக சட்ட ஒழுங்கின் கவசங் களாகின. இதன் காரணமாக அரசியல் அமைப்பின் பகுதிகள் செயற்படாமல் இடைநிறுத்தம் செய்யப்பட்டமைக்கு சமூகம் அவசரகால அதிகாரங்களின் இடுக்குப்பிடிக் குள் இழுத்து வரப்பட்டன. பலத்தைப் பலத்தோடு மோதுதல் என்பது சாதாரண விதியாக மாறியது. அரசின் செயற்பாடுகள் இவ்வாறு ஒடுக்குமுறைக் கருவியாக மாறியதால் சமூகத்தின் சுதந்திரமான தொழிற்பாடுகள் படிப்படியாக அருகிச் சென்றன.

நாட்டில் காணப்பட்ட இனப்பிரச்சினை கூர்மை அடைந்து ஆயுதப் போராட்டமாக மாறிச் சென்றதால் அதனை ஒடுக்க அரசு பலவிதமான தந்திரோபாயங் களைப் பயன்படுத்தத் தொடங்கியது. பேச்சுவார்த்தை எனக்கூறி காலத்தைக் கடத்தத் தொடங்கியது. அதே வேளை மிகவும் கடுமையான சட்டங்களை உருவாக்கி தண்டனைகளை வழங்கியது. விசேட நீதிமன்றங்கள், விசேட பாதுகாப்பு வலயங்கள் ஏற்படுத்தப்பட்டன. பொலிசாருக்கும் இராணுவத்துக்கும் விசேட அதிகா ரங்கள் வழங்கப்பட்டன. 1978ம் ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்ட இன்றைய அரசியல் அமைப்பு அதிகாரக் குவிப்பையும் தனிமனித சர்வாதிகாரத்திற்கான வாய்ப்புகளை வழங்கிய போதிலும் 1983ம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரங்கள் இராணுவமயமாக்க லுக்கான பின்தளத்தை ஆட்சியாளருக்கு வழங்கின.

இலங்கை அரசுக் கட்டுமானங்கள் இனப்பிரச் சினையை அணுகியவிதமே, குறிப்பாக ஜனநாயக உரிமைகளுக்கான எழுச்சி நிலைமைகளை பயங்கர வாதமென வர்ணித்து அதனை ஒடுக்க எடுத்த முயற்சிகள் யாவும் ஆட்சிப் பலத்தை இறுக்கு வதற்கான தந்திரோபாயங்களாகவே அமைந்தன. இவ்வாறான தந்திரோபாயங்கள் எவ்வாறு அதிகார வர்க்கத்தினர் தொடர்ந்து ஆட்சியில் அமர வாய்ப்பை அளித்ததோ அவ்வாறான நிலைமைகள் தமிழ்ப் பகுதிகளில் நீடித்து நிலைப்பதற்கும் வழிகாலாக அமைந்தன. பாராளுமன்ற ஆட்சி தோல்வியடைந்த தாகக் கூறி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதி பதி ஆட்சியை உருவாக்கி தமது ஆட்சி அதிகாரத்தை நிலைத்து நீடிக்கச் செய்ய வடக்கு கிழக்குப் பகுதியில் காணப்பட்ட கொந்தளிப்பு நிலையை ஆட்சியாளர்கள் தமக்குச் சாதகமாக எவ்வாறு மாற்றினார்களோ அவ் வாறான ஒரு போக்கு தமிழ்ப்பகுதிகளிலும் உருவாகக் காரணமாக அமைந்தது.

சிங்கள பௌத்த மத மேலாதிக்கம் தனது அதிகார இருப்பைப் பேண தமிழீழப் போராட்டத்தை பயன் படுத்திக் கொண்டது. இராணுவ பலத்தைப் பெருக்கிக் கொண்டது. நாடு பிரியப் போவதாகவும் தாமே சிங்கள

> **“சிங்கள பௌத்தமத மேலாதிக்க வெறியர்களிடமிருந்து தமிழர்கள் விடுவிக்கப்பட்டு சுதந்திர தமிழீழத் தாயகத்தில் சுபீட்சத்தோடு வாழ வழிசெய்வோம் எனக் கடந்த கால் நூற்றாண்டு காலமாகப் போராடி வரும் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகபோக தலைமை தாமே எனக் கூறிச் செயற்பட்டார்கள்.”**

**"இலங்கை அரசு எவ்வாறு சட்டரீதியாக சமூகத்தை இராணுவ மயமாக்கலுக்குள் எடுத்துச் சென்றார்களோ அதேபோன்று தாமும் ஓர் அரச இயந்திரமாகச் செயற்படுவதான மாயத் தோற்றத்தை ஏற்படுத்தி தமிழ்ச் சமூகத்திற்குள் இராணுவ மயமாக்கலைத் தொடர்ந்தார்கள்."**

மக்களின் தாயகத்தைப் பாதுகாக்கக் கூடியவர்கள் எனவும் கூறி இராணுவத்திற்குத் தீனி போட்டு வளர்த்தார்கள். இதேபோன்ற நிலைமைகளைத் தமிழ்ப் பிரதேசங்களிலும் காணப்பட்டன. சிங்கள பௌத்தமத மேலாதிக்க வெறியர்களிடமிருந்து தமிழர்கள் விடுவிக்கப்பட்டு சுதந்திர தமிழீழத் தாயகத்தில் சுபீட்சத்தோடு வாழ வழிசெய்வோம் எனக்கூறி கடந்த 25 வருடங்களுக்கும் மேலாகப் போராடி வரும் விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் ஏக போக தலைமை தாமே எனவும் தமிழ் மக்கள்மீது அதிகாரம் செலுத்தும் உரிமை தமக்கேயுரியது எனவும் கூறிச் செயற்பட்டார்கள். தமிழ்ப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல் என்ற போர்வையில் முன்மொழியப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தில் தமது கையில் அதிகாரம் இருக்க வேண்டும் என்பதை முன்னிறுத்தியே விவாதித்தார்கள். தென்னிலங்கையில் காணப்படும் அரசு படிப்படியாக இராணுவ மயமாகிச் சென்ற நிலைமைகள் புலிகளின் அதிகார இருப்பைப் பேணுவதற்கான இறுக்கமான போக்கை அனுசரிப்பதற்குரிய வாய்ப்புகளை வழங்கின. அரசு மேலும் மேலும் கடினமான இராணுவப் பாதையை நோக்கிச் செல்வதையே இவர்களும் விரும்பினர். இவ்வாறான போக்கே தமிழ் ஈழம் என்ற போலிக் கோஷங்களினூடாக அதிகார இருப்பைத் தொடர்ந்து வைத்திருக்க உதவி வருகிறது.

தமிழீழக் கோரிக்கை என்பது இனப்பிரச்சினைக்கான தீர்வாக அமையாது விடினும் அக்கோரிக்கையைத் தொடர்ச்சியாகவும் விடாப்பிடியாகவும் வற்புறுத்துவதன்மூலமே அதிகாரத்தைத் தம்வசம் வைத்திருக்க முடியும் என்பதை அவர்கள் தெளிவாக உணர்ந்துள்ளனர். இப்போக்கின் உண்மைத்தன்மையை அறிவதற்கு பின்வரும் சம்பவம் நல்ல உதாரண மாகும். கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரே வெற்றி பெறுவார் என்றும் தமிழர்களில் பலர் அவருக்கே வாக்களிப்பர் எனவும் கருதப்பட்டது. ரணில் சமஷ்டித் தீர்வை வற்பு றுத்திச் சென்றமையும் புலிகளுக்கும் அவருக்குமிடையே இரகசியமான புரிந்துணர்வு இருப்பதாகக் கருதப்பட்டதாலும் அவரின் வெற்றிக்கு புலிகள் உதவுவார்கள் எனக் கருதப்பட்டது. தேர்தலுக்கு இரு வாரங்கள் வரை இவ்வாறான எதிர்பார்ப்பே காணப்பட்டது. ஆனால் இறுதி நேரத்தில் தமிழ் மக்கள் தேர்தலில் வாக்களிக்காமல் தடுக்கப்பட்டார்கள். இங்கு எழும் கேள்வி இதுதான். சமஷ்டித் தீர்வை வற்புறுத்தி ரணில் போட்டியிட்டார். ஒற்றையாட்சியை ஆதரித்தும் தாயகக் கோட்பாட்டை நிராகரித்தும் மகிந்த போட்டியிட்டார். இந்நிலையில் தமிழ்மக்கள் ஏன் இறுதி நேரத்தில் தடுக்கப்பட்டார்கள்?

சமஷ்டி அடிப்படையிலான தீர்வு காணப்படுமானால் அது புலிகளின் அதிகார இருப்பிற்கு மிகவும் அச்சுறுத்தலானது. அதேநேரத்தில் தாயகக் கோட்பாட்டிற்கு எதிராக மகிந்த செயற்படவேண்டுமெனில் போரை நோக்கிச் செல்ல வேண்டும். போரை நோக்கி அரசு திரும்பினால் அதுவே புலிகளின் அதிகார இருப்பை உறுதிப்படுத்தப் போதுமானது.

ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்த சில வாரங்களுக்குள்ளாகவே புலிகள் போருக்கான நிலைமைகளைத் துரிதப்படுத்தினார்கள். நான்கு வருடங்களுக்கும் மேலாக போர்நிறுத்த ஒப்பந்த அடிப்படையில் காணப்பட்ட ஓரளவு அமைதி நிலை காரணமாக மக்கள் அவர்களுக்கு எதிராக கிளர்ந்து எழும் நிலை காணப்பட்டது. காரியாலயங்கள் மூடப்பட வேண்டி ஏற்பட்டன. குருநகர் போன்ற இடங்களில் மக்கள் பகிரங்கமாகவே எதிர்த்துச் செயற்பட்ட சம்பவங்கள் நடந்தேறின.

அரசின் இராணுவ மயமாக்கலும் தமிழ்ப்பகுதிகளில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ராணுவமயமாக்கலும் ஒன்றுக்கொன்று சார்பாகவே செயற்பட்டன. தமிழீழக் கோரிக்கை என்பது மக்களின்மீது தமது எதேச்சாதிகாரத்தைத் திணிப்பதற்கான அரசியல் கோஷமாக அமைந்தது. தொடர்ச்சியான கொந்தளிப்பு நிலைமைகளை வைத்திருப்பது, இராணுவத்திற்கு எதிரான தாக்குதல்களை மக்கள் குடியிருப்புகளை அண்டிய பகுதிகளில் மேற்கொள்வது, பாடசாலை மாணவர்களை ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுத்துவது என்பன சமாதானத்திற்கான அல்லது அமைதிக்கான வாய்ப்புகளைத் தடுப்பதாகவே அமைந்தது. இராணுவத்திற்கு எதிரான கிளைமோர் தாக்குதல்களில் ஈடுபடுவோருக்கு பணம் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டது. உளவு நடவடிக்கையில் சிறுவர் முதல் முதியோர் வரை ஈடுபடுத்தப்பட்டார்கள்.

இலங்கை அரசு எவ்வாறு சட்டரீதியாக சமூகத்தை இராணுவ மயமாக்கலுக்குள் எடுத்துச் சென்றார்களோ அதேபோன்று தாமும் ஓர் அரச இயந்திரமாகச் செயற்படுவதான மாயத் தோற்றத்தை ஏற்படுத்தி தமிழ்ச் சமூகத்திற்குள் இராணுவ மயமாக்கலைத் தொடர்ந்தார்கள். அரசின் பயங்கரவாதத்திற்கு எதிரான ஒடுக்குமுறைகளும் அரசியல்தீர்வு தொடர்பான தெளிவற்ற நெறியற்ற போக்குகளும் தமிழீழக் கோரிக்கைக்குப் பிராணவாயுவை வழங்கி வந்தன.

இதுவரை இலங்கையில் ஜனநாயகரீதியாக தெரிவு செய்யப்பட்ட அரசு எவ்வாறு படிப்படியாக அரச இயந்திரத்தை இராணுவமயமாக்கியது என்பதையும் இதன்

காரணமாக தமிழ்க் குறுந் தேசியவாதம் தமிழ் ஈழக் கோரிக்கையை முன்னிலைப்படுத்தி எவ்வாறு தமிழ்ப் பிரதேசங்களை இராணுவமயமாக்கியது என்பதனையும் பார்த்தோம். மொத்தத்தில் நாடு தழுவிய ரீதியில் ஜனநாயக விழுமியங்கள் அழிந்து செல்வதும் நாடு படிப்படியாக இராணுவ சர்வாதிகாரத்தை நோக்கிச் செல்வதும் மிகவும் ஆபத்தான நிலைமைகளாகவே காணப்படுகின்றன. இத்தகைய பின்ன ணியில் இலங் கையில் வாழும் சிறுபான்மை இனங்கள், குறிப்பாகத் தமிழ் மக்கள், எவ்வாறான அரசியல் அணுகுமுறை யினூடாகச் செல்லவேண்டும் என்பது பற்றிய விவா தங்கள் இன்றைய காலகட்டத்தில் மிகவும் அவசியம ாகவே காணப்படுகின்றன.

புலிகளும் புலிகள் சார்ந்த அரசியல் சக்திகளும் தென்னிலங்கையில் இடம்பெற்று வரும் அரசியல் மாற்றம் குறித்த எந்தவித அவதானிப்பையும் கொண்டி ருக்கவில்லை. அவ்வாறான அவதானிப்புக்கள் காணப் களைப் புரிந்துகொண்டு மாற்று வழிகளில் சிந்தனை யைச் செலுத்தி இக்கொடுமையாளர்களின் துன்புறுத் தல்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளத் தயாராக வேண்டும். சிங்களப் பகுதிகளிலே ஏற்பட்டு வரும் இராணுவ மயமாக்கல் குறித்து மக்கள் விழிப்பு ணர்வு பெற்று வருகின்றனர். நாட்டுப் பிரிவினையை ஒடுக்குதல் என்ற போர்வையில் தமது ஜனநாயக உரிமைகள் படிப்படியாக பறிக்கப்படுவதை மக்கள் உணர்கின்றனர். பல செழிப்புள்ள மண் வளமிக்க பகு திகள் அந்நிய நாடுகளுக்கு வழங்கப்படுகின்றன. இப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் வேறு இடங்களில் குடியேற்றப்படுகின்றனர். மக்கள் பண மோசடிகளால் ஏமாற்றப்படுகின்றனர். இவ்வாறான கொடுமைகளுக்கு எதிராக செயற்பட்ட மக்கள் பொலிசாரால் தாக்கப் பட்ட சம்பவங்கள் சிங்களப் பகுதிகளில் இடம் பெற்றுள்ளன.

நாடு முழுவதிலும் காணப்படும் ஜனநாயக விரோதச்



பட்டால் அவற்றைத் தமது அரசியல் நோக்கத்திற்குப் பயன்படுத்துகிறார்களே தவிர, குறிப்பாக தமிழீழக் கோரிக்கையை நியாயப்படுத்த உபயோகிக்கிறார்களே தவிர, அதனால் ஏற்படக்கூடிய ஆபத்துகள் குறித்து மக்களை எச்சரிக்கத் தயாராக இல்லை. இவ்வாறான மாற்றங்கள் யாவும் சிங்கள அரசியலில் இடம்பெறுவ தாகக்கூறி அதன் தாற்பரியங்களை மூடி மறைக்கப் பார்க்கின்றனர். இவை தமிழ் மக்களைப் பாதிக்காது எனவும் தாமே தமிழ் மக்களின் பாதுகாவலர்களாக இருப்பதாகவும் போலிக் கற்பனைகளை ஊட்டு கின்றனர்.

மக்கள் இவ்வாறான சூழ்ச்சி அரசியல் நோக்கங் சூழல் சகலருக்கும் ஆபத்தானது என்பதை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும். இவ்வாறான போக்கு கட்டுங்கடங்காமல் சென்று இராணுவ ஆட்சிக்கான சூழலைத் தவிர்க்க வேண்டுமாயின் ஜனநாயக மாற்றம் கோரி நாடு தழுவியரீதியில் இடம்பெறும் வாதப்பிரதி வாதங்களில் தமிழ்மக்களும் ஈடுபடுவது அவசியமா கிறது. ஜனநாயக மாற்றத்துடன் கூடிய இனப் பிரச்சி னைக்கான தீர்வுகள் விவாதிக்கப்படவேண்டிய தருணம் இதுவாகும்.

அந்தவகையில் சர்வகட்சி பிரதிநிதிக் குழுக்களின் தலைவர் என்ற அடிப்படையில் திஸ்ஸ விதாரண அவர் களால் முன்வைக்கப்பட்ட தீர்வுகள் மக்களின்

கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அத் தீர்வுகள் நாடு தழுவிய ஜனநாயக மாற்றத்தையும் சிறுபான்மை இனங்களின் பாதுகாப்பையும் வலியுறுத்துகிறது. மைய அரசியலிலும் பிராந்திய அரசியலிலும் சிறுபான்மை இனங்களின் வலுவான பிரதிநிதித்துவத்தைக் கோருகிறது.

அதிகாரப் பரவலாக்கம், அதிகாரப் பகிர்வு என்ற முக்கியமான ஜனநாயக அரசியல் அம்சங்கள் செயற்படுவதற்கான அரசியற் கட்டுமானம் வரையறுக்கப்பட்டுள்ளது. அதிகாரப் பரவலாக்கத்திற்கான குறைந்த பட்ச அலகாக மாகாணசபை முன்மொழியப்பட்டுள்ளது. மக்களின் அதிகாரம் மக்களால் பிரயோகிக்கப்பட வேண்டும் என்பதனை அடிப்படையாகக் கொண்டு மாகாணசபைகளுக்கு சட்டம் இயற்றும் அதிகாரம் வழங்கப்படுகிறது. மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அவ்வப் பிரதேச மக்களின் பங்களிப்பையும் பெறும் வகையில் அதிகாரப் பகிர்வு முறை வழங்கப்படுகின்றது.

இங்கு இரண்டு முக்கியமான ஜனநாயக அம்சங்கள் கவனிக்கப்படவேண்டியன. அதாவது மத்திய அரசினதும் மாகாண அரசினதும் உட்கட்டுமானங்கள் பற்றியவையாகும். மத்திய அரசில் குவிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பாராளுமன்றத்தின் அதிகாரத்துக்கு மாற்றப்படுவது, செனட் சபை என்ற இரண்டாவது சபை உருவாக்கம், இரண்டு உபஜனாதிபதிகள் நியமனமும் அதில் சிறுபான்மை இனப்பிரதிநிதிகளின் நியமனம் என்பன மத்திய அரசு எவ்வாறு ஜனநாயகப்படுத்தப்படுகிறது என்பதனை உணர்த்துகிறது. இரண்டு உபஜனாதிபதிகளும் அரசியலமைப்பு நீதிமன்றம் அல்லது உயர்பதவி நியமனக்குழுத்தலைவராகவும் மற்றவர் செனட் சபையின் தலைவராகவும் நியமிக்கப்படுகிறார்.

மாகாணசபை உறுப்பினர்கள் செனட் சபை உறுப்பினர்களாகவும் மந்திரிசபை உறுப்பினர்களாகவும் நியமிக்கப்படுவதால் மாகாணசபைப் பிரதிநிதிகள் தேசிய அரசியலில் தீர்மானங்களை இயற்றும் வாய்ப்பினைப் பெறுகின்றனர். இதனால் பிரதேச நலன்களைப் பாதுகாக்கும் வாய்ப்புக் கிடைப்பதோடு தேசிய அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்த தலைவர்களாக வளரும் சந்தர்ப்பமும் கிட்டுகிறது. அத்துடன் நாடு பல்தேசிய இனங்கள் வாழும் தேசம் என்பதை மத்திய அரசின் பிரதிநிதித்துவம் மந்திரிசபை நியமனங்கள் என்பன உணர்த்துவதால் தேசியக் கட்டுமானத்தில் சகல இனங்களும் பங்குபற்றுவதற்கான வாய்ப்பும் கிட்டுகிறது.

அதிகாரப் பரவலாக்கத்தின் அலகாக மாகாண சபைகள் விளங்குகின்றன. மாகாணம் என்பது பரந்த பிரதேசத்தை உள்ளடக்குவதாலும் இப்பரந்த பிரதேசத்தில் வாழும் பல்வேறு நலன்களைப் பிரதிபலிக்கும் குழுவினர் நிர்வாகத்தில் பலமான வகையில் பிரதிநிதித்துவம் வகிக்க முடியும். மாகாண சபைக்கான தேர்தல் விகிதாசார அடிப்படையில் அமையுமாயின் ஆங்காங்கே வாழும் சிறுபான்மைக் குழுக்கள் உதாரணமாக, முஸ்லிம்கள், சிங்களவர்கள், மலையக மக்கள், தலித் மக்கள் ஆகியோர் பலமான பிரதிநிதித்துவத்தை நிர்வாகத்தில் வகிக்க முடியும்.

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, அதிகாரப் பரவலாக்கம், அதிகாரப் பகிர்வு என்பனவற்றின் பரந்த அளவு தேசிய நல்லிணக்கத்தின் அடிப்படையிலேயே தங்கியுள்ளது.

அதிகாரப் பரவலாக்கம் குறித்து சிங்கள தேசியவாத சக்திகள் மத்தியிலே பலத்த சந்தேகம் நிலவுகிறது. அதிகளவான அதிகாரம் என்பது தற்போதுள்ள அரசியல் சூழலில் பிரிவினையை மேலும் ஊக்குவிக்கும் என்ற வாதம் பலமாக உள்ளது. இவ்வாதங்களை நாம் முற்றாக நிராகரிக்க முடியாது. ஆனால் இச் சந்தேகத்தைக் காரணமாகக் காட்டி, நாடு முழுவதிற்குமான ஜனநாயக மாற்றத்தைத் தள்ளிப் போடுவதோ அல்லது இச்சந்தேகங்களை நீக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளாமல் காலத்தைத் தாழ்த்துவதோ சரியான அணுகுமுறையாக அமையமாட்டாது.

நாட்டுப் பிரிவினையை நோக்கி முன்வைக்கப்படும் அரசியல் கோரிக்கைகளின் வெற்றுத்தன்மையை மிகவும் ஆதாரபூர்வமாக நிராகரிக்க வேண்டும். கடந்த 25 ஆண்டு காலத்திற்கும் மேலாக இக்கோரிக்கை, மாற்று அரசியல் அணுகுமுறைகளை நோக்கிய விவாதங்களை அல்லது அரசியல் பாதையை நிராகரித்து வந்தது என்பதனை நியாயபூர்வமாக விளக்க வேண்டும். இலங்கை முழுவதிலும் செயற்பாட்டில் உள்ள திறந்த பொருளாதாரம் இப்பிரிவினைக் கோரிக்கையை எவ்வாறு செல்லாக் காசாக்கியுள்ளது என்பதனையும் அதேபோன்று சிங்கள பௌத்தமத மேலாதிக்க சிந்தனைகளின் கோரவிளைவுகளையும் அதன் தோல்விகளையும் முன்வைக்க வேண்டும்.

இவ்வாறான ஓர் அரசியல் கோட்பாட்டின் மூலமாகவே இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கி இன்றைய அரசியலை நகர்த்த முடியும். சிங்கள பௌத்த மத மேலாதிக்க சிந்தனைகள், தமிழீழக் கோரிக்கைகள் என்பன தோல்வி அடைந்த கோட்பாடுகள் என்பதனை உரக்கச் சொல்வதன் மூலம் அரசியல் பன்மைத்துவம் ஜனநாயகம் மனித உரிமைகள் சமத்துவம் என்பனவே நாட்டின் ஐக்கியத்தைப் பேணுவதற்கான முன்நிபந்தனைகளாக அமைதல் வேண்டும் என்பதனையும் வற்புறுத்தும் அரசியல் முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

எனவே நாட்டில் வாழும் சிறுபான்மை இனங்கள் இலங்கையின் இன்றைய அரசியல் போக்கை வரலாற்று ரீதியாகப் பார்ப்பதும் அரசியல் கட்டுமானங்களில் ஏற்பட்டுவரும் மாற்றங்களின் ஆபத்துகளை உணர்வதும் அதனைத் தடுப்பதும் தேசத்தின் நலன் கருதி மாற்று ஏற்பாடுகளை விவாதிப்பதும் அவசியத் தேவையாகியுள்ளது. இதுவே சகல ஜனநாயக சக்திகளின் இன்றைய வேலைத்திட்டமாக அமைய முடியும்.

ஜுலை 2007

---

**இக் கட்டுரைக்கான புகைப்படங்களின் உரிமை:**
Q. SAKAMAKI ( Japan)
Redux Pictures for Newsweek